Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO. 135/2018
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 7 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அமிர்தலிங்கம் | தொழில் | உதவி ஆய்வாளர் ஓய்வு |
| கிராமம் | பேராம்பட்டு | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 08th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முன் விசாரணை (1ம் எதிரி ஆஜர் 2 முதல் 4 வரையிலான எதிரிகள் மனுவின் பேரில் ஆஜரில்லை)**

1. நான் திருப்பத்தூர் காவல் கட்டுப்பாட்டு அலுவலக உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 20.10.2018-ம் தேதி ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின் பேரில் அன்று நள்ளிரவு திருப்பத்தூர் அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் உள்நோயாளியாக இருந்த கணபதி த/பெ சண்முகம் பள்ளத்தூர் கிராமம், சின்னகம்மியம்பட்டு ரெட்டியூர் அஞ்சல் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று 21.10.2018-ம் தேதி காலை 06.00 மணிக்கு நிலைய CSR 420/2018 என பதிவு செய்தேன். பின்பு மேற்படி CSRயை மறுபரிசீலனை செய்து, 25.10.2018-ம் தேதி இரவு 09.30 மணிக்கு நிலைய குற்ற எண். 351/2018 பிரிவு 294(பி) 324 இதச பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. அதன் தொடர்ச்சியாக 26.10.2018 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான இராமனூர் கூட்டுரோடு ஓம்சக்தி பால் டைரியிடம் சாட்சிகள் வசந்தகுமார, ராகுல்

ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செயதேன். **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினமே காலை 07.30 மணியளவில் சாட்சி வசந்தகுமார் ஆஜர்செய்த 61 செமீ நீளம்கொண்ட இரும்பு பைப் 1/2 இன்ச் பைப் சாடசிகள் வசந்தகுமார் மற்றும் ராகுல் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா..ஆ5 ஆக குறியீடு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எதிரிகளை தேடி சென்றதில் 03.11.2018 அன்று எதிரிகள் வினோத், தமிழ்செல்வன் ஆகியோர்களை பொன்னேரி பேருந்து நிலையத்திடம் மாலை 04.00 மணிக்கு கைது செய்தேன்.

3. பின்பு மூர்த்தி, விக்னேஷ் இருவரும் 31.10.2018 அன்று குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1-ல் சரண் அடைந்து பிணையில் சென்றுள்ளனர். மேற்கொண்டு வாதிக்கு சிகிச்சை செய்த மருத்துவர் சசிகலா அவர்களை விசாரித்து வாதிக்கும் அவரது தம்பி உத்திரமூர்த்திக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும், வாதியின் மகன் சோதீஸ்வரன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதால் வழக்கின் சட்ட பரிவுகளை மாற்றம் செய்து இதச பிரிவுகள் 294(பி), 324, 326, 342 என பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4.** கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த படிவம் 91 அ.சா.ஆ10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன்பின்னர் என்னுடைய விசாரணையை முடித்துக் கொண்டு எதிரிகள் நால்வர் மீதும் இதச பிரிவுகள் 294(பி), 324, 326, 342 ன் கீழ் 19.11.2018 அனறு இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த அன்றே புகார் பெறப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளும ஒரு புகார் கொடுத்தார்கள்என்றால் சரிதான். இரண்டு தரப்பினர்களையும் விசாரணை செய்தேனா என்றால் செய்தேன். அந்த விசாரணையில் இரு தரப்பினர்களும் சமாதானம் ஆகவில்லை என்றால் சரிதான். நான்

மருத்துவமனையில் எந்த தேதியில் புகார் வாக்குமூலம் பெற்றேன் என்றால் 20.10.2018 அன்று பெற்றேன். எதிரிகள் யாரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற வில்லை என்றால் சரிதான். ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் இராமானூர் எவ்வளவு தூரம் என்றால் 5, 6 கிமீ இருக்கும். சம்பவ இடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்றால் 26.10.2018 அன்று காலை 07.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தில் யார் யார்கள் இருந்தார்கள் என்றால் வசந்தகுமார், ராகுல், கணபதி, உத்திரமூர்த்தி, ஜோதீஸ்வரன் ஆகியோர் இருந்தனர். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகளில் உள்ளவர்களை சாட்சிகளாக விசாரித்தேனா என்றால் இல்லை.

2. நான் சொல்வது போல் எந்த வழக்குசொத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் தவறாக அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்று சம்பவ இடத்திற்கு செல்லாமல், இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அனைத்து சாட்சிகளையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சமாதானம் பேசுவதாக சொல்லி அங்கேயே கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் யார்யாரை விசாரணை செய்தேன் என்றால் கணபதி, ஜோதிஸ்வரன், உத்திரமூர்த்தி ஆகியோரை விசாரித்து கணபதியிடம் மட்டும் வாக்குமூலம் பெற்றேன். கணபதிக்கு அடி எதுவும் படவில்லை என்றால் அவருக்கும் உத்திரமூர்த்திக்கும் கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது.

3. சிஎஸ்ஆர் பதிவு செய்த பின்னர் எத்தனைநாட்களில் முடிக்க வேண்டும் என்றால் 7 நாட்களில் முடிக்க வேண்டும் அவ்வாறு விசாரணை முடிக்கவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம் என்றால் சரிதான். சிஎஸ்ஆர் கொடுத்தால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய இயலாது என சட்டம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. புகார் கொடுத்து காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது யாருடைய தூண்டுதலின் பேரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்ாறல் சரியல்ல. சம்பவம் நடந்து 6 நாடகள் கழித்து சம்பவ

இடத்திற்கு சென்ற பின்னர் வழக்கு சொத்தை யார் எடுதது என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சாட்சி வசந்தகுமார் எடுத்து ஆஜர் செய்தார். சம்பவம் நடந்த இடம் பொது இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இராமானூர் கூட்டுரோடு என்றால் சரிதான். அவ்வாறு 6 நாட்கள் கழித்து ஆஜர் செய்தால் நாங்கள் கைப்பற்றுவோமா என்றால் சம்பவத்தின் போது எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்ததால் கைப்பற்றினேன். புகார்தாரர் அதிகாரிகள் மூலம் influence செய்ததால் சரிவர விசாரணை செய்யாமல் நான் எதிரிகள் மீது பொய்யான வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காயம்பட்டவர்களை எங்கு வைத்து விசாரணை செய்தேன் என்றால் சம்பவதன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் விசாரணை செய்தேன். அவர்களை வேறு எந்த மருத்துவமனையிலாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை.